செ.வெ.எண்.326. நாள். 18.05.2018.

**திருநெல்வேலி மாவட்டத்தில் <u>புராஜெக்ட் நியூ விங்க்ஸ்: (Project New Wings)</u> திட்டத்தின் கீழ் துப்புரவு தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பயிற்சிகள் வழங்க மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 23.05.2018 அன்று பதிவு செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்துாரி , இ.ஆ.ப. அவர்கள் தகவல்:**

-----

திருநெல்வேலி மாவட்டத்தின் துாய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மாவட்ட நிர்வாகத்தினால் **Project New Wings** என்ற திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் துாய்மை பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு உயர்கல்வி பயில, சுய தொழில் துவங்க ஆலோசனை, கடன் வசதி, மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் தனித்திறன் பயிற்சிகளும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே ரெடிங்டன் நிறுவனத்தால் மாண்டெசேரி ஆசிரியர் பயிற்சி , IOB Rseti நிறுவனத்தால் 30 நாட்கள் தையல் பயிற்சி ICICI Skills Academy –யால் கோயம்புத்துாரில் AC, Refrigerator repair தொடர்பான பயிற்சி , Bodhi Tree Skills நிறுவனத்தால் வாழ்வியல் கல்வி, Spoken English, Career Guidance தொடர்பான பயிற்சி ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளும் பெற்றுள்ளனர்.

மேலும், இதன் தொடர்ச்சியாக இக்**குடும்பங்களில் 8 முதல் 12ம் வகுப்பு வரை கல்வி தகுதியுள்ள, 18 முதல் 23 வயது வரையுள்ள மாணவர்களுக்கு கீழ்கண்ட பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன:**

1. கேட்டர்பில்லர் (சென்னை) அமைப்பு மூலம் 3 ஆண்டுகால உற்பத்தி தொழில்நுட்ப டிப்ளோமா (Diploma in Manufacturing Technology) பயிற்சி :

பயிற்சி காலத்தில் 2 வேளை உணவு மற்றும் Stipend கீழ்க்கண்ட விதத்தில் வழங்கப்படும். முதலாவது ஆண்டு –ரூ.9,000/– 2ம் ஆண்டு –ரூ.10,000/–3ம் ஆண்டு –ரூ.11,000/–

**2. ICIC Skills Academy –யால் கோயம்புத்துாரில் பின்வரும் பயிற்சிகள் –**

1. Electrical, home appliance repair, 2. Refrigeration & Air conditioner repair 3. Pumps & motor repair, 4. Central air conditioning repair, 5.Two wheeler service

**பயிற்சிக் காலம்** : 2 **மாதம்** ( Residential training- **உணவு** , **தங்குமிடம் வழங்கப்படும்**)

இத்திட்டத்தின் மூலம் மேற்கண்ட பயிற்சிகளில் சேர்ந்து பயிற்சி பெற விரும்பும் துப்புரவு பணியாளர்களின் குழந்தைகள் 23.05.2018 அன்று மாலை 3.00 மணியளவில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொண்டு விபரங்களைத் தெரிந்து கொள்ளவும் பயிற்சிக்கு பதிவு செய்து கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சியத் தலைவர் திரு.சந்தீப் நந்துாரி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.